**காவல் கண்காணிப்பாளர் (மத்திய சரகம்), ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை–16, அவர்களின் செயல்முறை ஆணை.**

முன்னிலை: திருமதி.R.பொன்னி, இ.கா.ப.,

ந.க.எண்.அ5/11487/2012
இ.ஆ.எண்.449/2020

நாள்: 11.09.2020

பொருள்: ஊதக துறை – பணியமைப்பு – திரு.S.சோலைக்குமார், இளநிலை உதவியாளர் – கருணை அடிப்படையில் பணி நியமனம் – பணி வரன்முறைப்படுத்தல் – தொடர்பாக.

பார்வை:
1. இவ்வியக்கக ஆணை ந.க.எண்.அ5/11487/12 நாள்.26.03.2018.
2. அரசாணை (3டி) எண்.05. பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த (என்) துறை, நாள்.01.09.2020.

* * * * * * * *

ஆணை:

பார்வை 1–ல் காணும் இவ்வியக்கக ஆணையின்படி 17.05.2018 மு.ப. முதல் இவ்வியக்கக நிர்வாகப்பிரிவில் இளநிலை உதவியாளராக கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட திரு.S.சோலைக்குமார் என்பவரின் பணி பார்வை 2–ல் காணும் அரசாணையின்படி 17.05.2018 மு.ப. முதல் முறைப்படுத்தப்பட்டு பணிவரன் முறை செய்து ஆணையிடப்படுகிறது.

ஒம்/–காவல் கண்காணிப்பாளர் (ம.ச)

இணைப்பு: பார்வை 2–ல் கண்ட அரசாணை.

**பெறுநர்**

திரு.S.சோலைக்குமார், ✓
இளநிலை உதவியாளர்,
ஊதக துறை, கரூர்.
(ஊதக மூலமாக)

**நகல்:**

1. சம்பள கணக்கு அலுவலகம் (தெ), சென்னை–35.
2. இ.ஆ.புத்தகம்.

/உ.ந.உ.ப.அ./

B. [signature] 14/9/20
நிர்வாக அலுவலவல்
ஊதக துறை, சென்னை–16.

CC
For information and file.
A. [signature] 22/9/20

**சுருக்கம்**

பொதுப்பணிகள் - தமிழ்நாடு அமைச்சுப்பணி - ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககம் - தேனி மாவட்ட பிரிவு அலுவலகத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராகப் பணிபுரிந்து பணியிடையே காலமான திரு.A.சுப்புராஜ் என்பவரின் மகன் திரு.S.சோலைக்குமார் என்பவருக்கு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் வழங்கப்பட்டது - இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்த (N) துறை**

அரசாணை(3D) எண் .05

நாள் : 01.09.2020
சார்வரி, ஆவணி-16
திருவள்ளுவர் ஆண்டு 2051

படிக்க :

1. இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககக் கடித ந.க.எண்.அ5/11487/2012, நாள் 09.12.2019.
2. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்த (M) துறை, நாள் 01.08.2018.
3. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (Q-1) துறை, நாள் 23.01.2020.

*******

**ஆணை :**

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தின் கீழ் செயல்படும் தேனி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு.A.சுப்புராஜ் என்பவர் 20.02.2012 அன்று பணியிடையே காலமானதால், அவரது மறைவிற்குப் பின் போதிய வருமானமின்றி அவரது குடும்பம் வறுமையில் வாடுவதாகத் தெரிவித்து, அவரது மனைவி திருமதி.S.லட்சுமி அவர்கள் தனது மூத்த மகன் திரு.S.சோலைக்குமார் என்பவருக்கு கருணை அடிப்படையில் அரசுப் பணி நியமனம் வழங்குமாறு கோரியிருந்தார் என்றும், அவரது குடும்பத்தில் எவரும் அரசுப் பணியிலோ, தனியார் துறையிலோ பணிபுரியவில்லை என்பதாலும், அவரது குடும்பம் வறுமையில் வாடுவதைக் கருத்தில் கொண்டும் மற்றும் கருணையடிப்படையிலான பணி நியமனத்திற்கென்று வட்டாட்சியரால் வழங்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த சான்றிதழ் அடிப்படையிலும் காலமான அரசுப் பணியாளரின் வாரிசுதாரரான திரு.S.சோலைக்குமார் என்பவருக்குக் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணிநியமனம் வழங்கலாமென

(த.பி.பா)

முடிவெடுக்கப்பட்டு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தில் இளநிலை உதவியாளராக 17.05.2018 அன்று திரு.S.சோலைக்குமார் அவர்களுக்கு பணி நியமனம் வழங்கப்பட்டது என்றும், அதனைத் தொடர்ந்து திரு.S.சோலைக்குமார் அவர்கள் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தில் 17.05.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வருகின்றார் என்றும் தெரிவித்து, திரு.S.சோலைக்குமார் அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் பணி வரன்முறை செய்யுமாறு இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககம் அவர்கள் அரசைக் கோரியுள்ளார்.

2. இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககம் அவர்களின் கருத்துருவை கருணை அடிப்படையிலான பணி நியமனம் தொடர்பாக நடைமுறையிலுள்ள விதிகள் / அரசாணைகளின்படி அரசு கவனமுடன் பரிசீலித்து, திரு.S.சோலைக்குமார், இளநிலை உதவியாளர் அவர்களது பணியினை, அவர் அப்பணியிடத்திற்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தில் இளநிலை உதவியாளர் பணியில் 17.05.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால் தனியருக்கான ஆண்டு ஊதிய உயர்வு மற்றும் நிலுவைத் தொகை ஏதும் நிலுவையிலிருப்பின் அவற்றை நடைமுறையில் உள்ள விதிகளின்படி பெறத் தகுதியுடையவராகிறார்.

3. இவ்வரசாணை, முறையே தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (Q-2) துறை மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த (G) துறை ஆகியவற்றின் அலுவல் சார்பற்ற எண்.8525/Q-2/2020, நாள் 20.07.2020 மற்றும் அலுவல் சார்பற்ற எண்.18197/G-2/2020-1, நாள்19.08.2020-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சீ.ஸ்வர்ணா
அரசு செயலாளர்

பெறுநர்

இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககம், ஆலந்தூர், சென்னை-16

திரு.S.சோலைக்குமார், இளநிலை உதவியாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககம், ஆலந்தூர், சென்னை-16.
(ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தின் வழியாக)

மாநிலக் கணக்காயர், சென்னை-18/35

சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-09/35.

<u>நகல்:</u>

அரசு செயலாளரின் முதன்மை தனிச் செயலாளர், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, சென்னை-09.

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (Q-2) துறை, சென்னை - 09.

பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்த (நி.சீ-II) துறை, சென்னை-09. (3 நகல்கள்)

இருப்புக் கோப்பு உதிரி / நகல்.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

02/9/2020

பிரிவு அலுவலர்

2/9/2020